


கடலூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், மாநகர பொறுப்புகளுக்கான நேர்காணல் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் சி.வி.கணேசன் தலைமையில் சபா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ,அணியின் மாநில நிர்வாகிகள் துரை.கி.சரவணன், முனைவர் சி.பிரதீப் முன்னிலையில் நடைபெற்றது.இதில் QR Codeல் பதிவு செய்து 300க்கும் மேற்பட்ட நபர்கள் பங்கேற்றனர். பொறியாளர் அணி மாவட்ட நிர்வாகிகள் நிரஞ்சன், செம்பியன்,ராம் சிங், செந்தில்நாதன்,பாண்டுரங்கன் கலந்து கொண்டனர்

# கடலூர் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் து.தங்கராசு மறைவு!

## கழக முன்னணியினர் – நிர்வாகிகள் அஞ்சலி!



கடலூர்,ஏப்.20-

கடலூர் கிழக்கு மாவட்ட அவைத் தலைவரும் முன்னாள் நகர் மன்றத் தலைவரும், முன்னாள் நகரக் கழகச் செயலாளருமான து.தங்கராசு அவர்கள் நேற்று (19.4.2025) காலை 6.30 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த து.தங்கராசு அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாருக்கு சரசு என்ற மனைவியும், ரமேஷ், செல்வகுமார் என்ற மகன் களும், மணிமேகலை, சசிகலா என்ற மகள்களும் உள்ளனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (20.4.2025-ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு கடலூர்,திருப்பாபுலியூர், அண்ணாநகரில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

### எழும்பூர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்

# புதிய ரேஷன் கடை கட்டும் திட்டப் பணி!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஏப். 20-

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, புரசைவாக்கம், சதாசிவம் தெருவில், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 24.41 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை கட்டும் திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

இக்கட்டிடப் பணி முடிந்த பின், புரசைவாக்கம், பார்த்தசாரதி தெருவில் தனியார் கட்டிடத்தில் செயல்பட்டு வரும் ரேஷன் கடை, அரசுக்குச் சொந்தமான இப்புதிய கட்டிடத்திற்கு இடம் மாற்றம் செய்யப்படும். இதன் மூலம் சதாசிவம் தெரு, பொன்னன் தெரு, தாண்டவராயன் தெரு, சாலைமா நகர், ஆர்.கே.புரம், திடீர் நகர், சண்முகராயன் தெரு, புதிய தாண்டவராயன் தெரு, டி.வீ.ஹெச்.லூம்பினி ஸ்கொயர், ஹர்ஹந்த் வைகுண்ட் அபார்மெண்ட்ஸ் ஆகிய இடங்களில் வசித்துவரும் குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெறுவார்கள்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருசோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர்கள் வெ.மருதன், விஸ்வநாதன்; மாவட்டப் பிரதிநிதிகள் கமலக்கண்ணன், மா.காந்தி; 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா. வெற்றிவேல், தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலெட்சுமி, முன்னாள் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் விஜயபோஸ், வழக்கறிஞர் நேரு பிரபாகரன், முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், பத்மநாபன், சிம்பு என்ற பிரதாப், வெங்கடேசன், ஐசக், கபில், விஜயகுமார், சிவா, இஸ்ரேல், சாலமன், கோகுல், கோமகன், ஜெ.சரவணன், பாக முகவர் கவிதா, வேலு, தன பிரபாகரன், நாகராஜ், புகழேந்தி, சத்யகலா, அசினா பேகம், எஸ்.கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.



எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, புரசைவாக்கம், சதாசிவம் தெருவில், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 24.41 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை கட்டும் திட்டப் பணிக்கு கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அடிக்கல் நாட்டினார்.



தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞர் அணி 55, 56 வார்டு மற்றும் தீபம் மருத்துவமனை இணைந்து தமிழக முதல்வர் தளபதியின் பிறந்த நாளை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது இந்த முகாமை பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ். சேகர் எம் சி தொடங்கி வைத்தார், இதில் பி .புகழேந்தி எம். சி. இரா. ஓம் பிரகாஷ். கோல்ட் டீ .பிரகாஷ், பி. கே. சத்திய பிரபு , வி. கார்த்திக். வே. சுப்பிரமணியம், சா .பிரபு, ,ஜெ. இன்சமாம், கோவிந்தராஜ், எஸ். கணேசன் ,விஜய் ஆனந்த், மற்றும் கழக முன்னோடிகளும் இளைஞர் அணி மகளிர் அணி மாணவர் அணி பொதுமக்களும் பங்கு பெற்று முகாமில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஏப்ரல் 20 2025

கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் வாளமாபுரம் கிளைக் கழகச் செயலாளராகவும்/ திருத்துறைப்பூண்டி ஒன்றிய கழகப் பொருளாளராகவும் மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் / ஒன்றிய விவசாய அணி அமைப்பாளராகவும் என பல்வேறு பொறுப்புகள் வகித்த

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவரும்/ 1980–ஆம் ஆண்டு இவர் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

## கழகமே தனது உயிர் மூச்சாக வாழ்ந்த கழகத்தின் மூத்த முன்னோடி - வாளமாபுரம்



# V.R.M (எ) V.R.முருகேசன்

மண்ணின் மைந்தருக்கு, மாசற்ற மாணிக்கத்திற்கு, எங்கள் இதய தெய்வத்திற்கு உளப்பூர்வமான நமஸ்காரங்கள். என்றும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை நினைவுகூர்ந்து, அவர்கள் காட்டிய பாதையில் நினைவுகளுடன் வாடும்

மனைவி:

**மோகனா முருகேசன்**

மகன் - மருமகள்: Mu.ரெத்தினபாண்டியன் - தமிழ்ச்செல்வி ரெத்தினபாண்டியன்

மகள் - மருமகன்: S.ரெத்தினகல்யாணி - K.செந்தில் குமார்

பேரக்குழந்தைகள்:

S.R.ராகவேந்திரா, R.ஹர்ஷிதா, R.ஹன்சிகா ஸ்ரீ

**குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் - வாளமாபுரம், திருத்துறைப்பூண்டி**


### தலைமை: மீ.வே. கருணாகரன் – முன்னிலை: ஆர்.டி. மதன்குமார்!

# சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் தண்ணீர் பந்தல்!

## எம்.எஸ். மணிகண்டன் ஏற்பாட்டில் – மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்!

சென்னை, ஏப்.20 -

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞரணி செயலாளர் - துணை முதல்வர் உதயிநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.மணிகண்டன் ஏற்பாட்டில் நல்லூர் ஊராட்சி காந்திநகர் போலீஸ் பூத் அருகில் பொதுமக்கள் கோடை வெப்பத்தை தணிக்க தண்ணீர் பந்தல் திறப்பு விழா இன்று 20.4.2025 காலை 9 மணி அளவில் நடைபெறுகிறது.

விழாவில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல். ஏ. கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைக்கவிருக்கிறார்.

இந்த நிகழ்வில் சோழவரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமை வகிக்கிறார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஒன்றிய பகுதி கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ரெட்ஹில்ஸ் எம்.எஸ்.மணிகண்டன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஈரோடு வடக்கு மாவட்டம் – முன்னாள் எம்.எல்.ஏ.

# ஒ.எஸ்.சுப்பிரமணியம் மனைவி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப். 20-

ஈரோடு வடக்கு மாவட்டக் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஒ.எஸ்.சுப்பிரமணியம் அவர்களின் மனைவி திருமதி எஸ்.லட்சுமி அம்மாள் அவர்கள் நேற்று (19.4.2025 - சனிக்கிழமை) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைவுச் செய்தி அறிந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை, மனைவியை இழந்து வாடும் முன்னாள் எம்.எல்.ஏ., ஒ.எஸ். சுப்பிரமணியனுக்கும், அன்னாரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# சி.வி.எம். அண்ணாமலை

### ஏப்ரல் 20 (1997)



சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து திராவிட இயக்கத்தின் செயல்வீரராகத் திகழ்ந்தவர்.

அன்றைய செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர். கலைஞர் அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.

1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு ஆறு மாத காலம் பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார்.

பெரியார், அண்ணா அறிவித்த அறப்போராட்டங்களிலும் – தலைவர் கலைஞர் அறிவித்த போராட்டங்களிலும் பங்கேற்று சிறைப் பறவையாக விளங்கியவர்.

இயக்கக் கொள்கைகளை எடுத்துரைத்திட அண்ணா, கலைஞர் ஆகியோர் நடத்திய நாடகங்களில் பங்கேற்று நடித்தவர்.

1986ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், தலைவர் கலைஞர் இவருக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஜி. சொக்கலிங்கம்

### ஏப்ரல் 20 (2000)



தன் இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே தொடர்பு கொள்ள, பழகுகிற வாய்ப்பும் பெற்றிருந்து, பின்னர் சட்டமன்ற உறுப்பினராகி, மக்கள் பணியாற்றுவதிலும், இந்த இயக்கத்தை வளர்ப்பதிலேயும், கொள்கையைக் காப்பதிலேயும் முன்நின்றவர்.

இவர் காஞ்சிபுரம் மாவட்டக் கழக துணைச் செயலாளராக பணியாற்றியவர்.

மாம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – 1977, 1980, 1996 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திருப்போரூர் தொகுதியில் கழகத்தின் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தலைவர் கலைஞர் அவர்களை கைது செய்தபோது, உடன் சிறை சென்று 45 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**